Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தலைவெட்டி என். 49
போன் 389

மலர் 10
இதழ் 70
தேசிய தினசரி

National Tamil Daily

யாழ்ப்பாணம் சோம சித்திரை 9 முகூறம் 22 ஞாயிற்றுக்கிழமை (21-4-68

நாவலர் நோக்கம் நிறைவேற சட்டரீதியான நிர்வாகசபை

சைவ மகாநாட்டில் அரசாங்கத்துக்கு கோரிக்கை

'சமய, கல்வி வளர்ச்சிக்கு இது உதவ முடியும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு சைவத்துக்கும் தமிழுக்கும்அயராது தொண்டாற்றி தமிழ்கூறும்நல்லுலகம் முழுவதும் சைவத்தை நிலை நிறுத்தியவர் ஆறுமுகநாவலர். அன்னார் சைவஉலகத்துக்குச் செய்தசேவை என்றும் நீடித்து நிலைத்ததாகும். அவரது பாரியசேவையின் சின்னங்களாக மிளிர்கின்ற பொருட்கள் சைவ உலகத்துக்குரிய பொதுமையான சொத்துக்களாகும். அவற்றைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு சைவ மக்கள் அனைவரையுமே சாரும்.

இக்கருத்து கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் வலியுறுத்தப் பட்டது.

நாவலர் பெருமான் விட்டுச்சென்ற பொருட்களனைத்தையும் அன்னார் தமது சாசனத்தில் குறிப்பிட்டபடி சைவ வளர்ச்சிக்கும் கல்விக்கும் திட்டமாக உபயோகிக்கக்கூடிய வழியேற்பட ஒரு சட்டரீதியான தர்மகர்த்தா சபையை அமைத்து நாவலர் குறிக்கோளை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் சைவ பரிபாலனசபையின் ஆதரவில் நடைபெற்ற இச் சைவமகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு வேண்டிய ஒழுங்குகளை பார்லிமெண்ட் உறுப்பினர்கள் செய்து தரவேண்டும் என்றும் தீர்மானத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. [நி]

அண்ணா புதாண்டை சந்தித்துப் பேசினர்

நியுயோர்க்கில் வரவேற்பு

நியுயோர்க், ஏப். 20

தமிழக முதன்மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை இன்று ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டை சந்தித்துப்பேசினார். இந்தச் சந்திப்பின்போது ஐ நா. வில் இந்திய பிரதிநிதியாக விருக்கும் திரு. பார்த்த சாரதியும் உடன் இருந்தார்.

ஐ. நா. உபகாரியதரிசியில் ஒருவரான திரு. நரசிம்மன் திரு. அண்ணாதுரைக்கு அளித்த விருந்துபசார மொன்றில் யுதாண்டும், திரு. பார்த்தசாரதியும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

திரு. அண்ணாதுரை நியுயோர்க் வந்துசேர்ந்த போது திரு. பார்த்தசாரதியும், வேறு பல தமிழ், இந்திய பிரமுகர்களும் அவரை வரவேற்றனர். திரு. பார்த்தசாரதி அளித்த ஒரு விருந்துபசாரத்தின்போது பாரதத்தைச் சேர்ந்த இந்தி பேசாத பலரும், இந்தி பேசும் பலரும் அவரைச் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்டார்கள்.

இந்தியாவில் தற்போது சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஒத்திப்போடப்பட்டாலும் தான் ஒற்றுமையைப் பாதுகாக்கலாம் என்று திரு. அண்ணாதுரை அப்பொழுது கூறினார். இந்தி பேசாத ராஜ்யங்களில் இந்தியை ஏற்கும் வரை ஆங்கிலம் இணைப்புமொழியாக நீடிக்க வேண்டும் என்றும் மொழி விஷயமாக எதிர்க்கட்சிகளின் பலவற்றுக்குள் கருத்து ஒற்றுமை இருக்கின்றது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே மொழிவிஜயமாக கருத்துவேற்றுமை இருக்கின்றது என்று திரு. அண்ணாதுரை கூறினார்.

யேல் பல்கலைக்கழகத்தின் பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் நேரு சகாப்தத்திற்குப்பிறகு மக்களே வெகுவாகக் கவர்ந்துள்ள இந்தியத் தலைவர்களில் திரு. அண்ணாதுரையும் ஒருவராக விளங்குகிறார் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தப்பல்கலைக்கழகம் திரு. அண்ணாதுரைக்கு கௌரவிக்கவிருக்கின்றது.

சிரித்திருத்தப்பாடசாலைக்கு

எதிரியை மூன்றுவருடம் அனுப்பும்படி தீர்ப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு தெல்லிப்பழை விமலச் சந்திரன் கொலைவழக்கில் எதிரியான செல்லையா விஜயரத்தினத்தை (வயது 17) வட்டுப்பிட்டிவெல சீர்திருத்தப் பாடசாலைக்கு 3வருடம் அனுப்பும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில்நேற்று விஜயரத்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

தெல்லிப்பழை வீமன்காமத்தில் 67ம் ஆண்டு பெப்ரவரி 23ந் தேதி முத்தையர் விமலச்சந்திரனைக் கொலைசெய்ததாக செல்லையா விஜயரத்தினம் என்பவர்

(6ம் பக்கம் பார்க்க)

நடேசர் அபிஷேகம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நடேசர் அபிஷேகமாகிய இன்று பகல் 10 மணிக்கு நடேசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு மகேசுவரபூஜையும் விசேஷ பெருமானுக்கு விசேஷ பூஜையும் நடைபெறும்.

ஆலயப்பிரவேசத்துக்கு

பல இடங்களில் சாத்தியமான சூழ்நிலை

இந்துமாமன்ற குழு கூட்டத்தில் அபிப்பிராயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணத்திலுள்ள பிரதானமான ஆலயங்களில் கூடிய சீக்கிரம் ஆலயப்பிரவேசத்தை நடத்துவதென்று அகில இலங்கை இந்துமாமன்றயாழ் ஆலயப் பிரவேசக் காரியக்குழு தீர்மானித்திருக்கின்றது.

குழு கூட்டம் மன்றத்தின் உபதலைவர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வரன்வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சுன்னாகம், புங்குடுதீவு முதலிய இடங்களில் ஆலய முகாமையாளர் உபயகாரர் வழிபடுவோர் ஆகியவர்களுடன் சந்தித்துப் பேசப்பட்ட விடயங்கள் ஆலோசிக்கப் பட்டன. அநேக இடங்களில்ஆலயப்பிரவேசம்நடைபெற சாத்தியமிருப்பதாக கூட்டத்தில் கருத்து வெளியிடப்பட்டது. அகில இலங்கை இந்துமாமன்ற ஆண்டு விழாவை மேமாதம் 11-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். பஸ்நிலையத்தில் நிலவும் வசதிக்குறைவுகள்

பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு "நாளொன்றுக்கு 1000 பிரயாணிகள் மட்டும் பிரயாணம் செய்யும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் மலசலகூடம், தண்ணீர் வசதி, படுக்கை அறை, பெண்களுக்கென தனியான அறை ஆகியன உண்டு. ஆனால் 37,000 க்கு மேற்பட்ட பிரயாணிகள்தினமும் பிரயாணம் செய்யும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இப்படியான வசதிகள் ஒன்றுமில்லாதது வருத்தத்தக்கது."

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. போ. ச. பகிரங்க விசாரணைக் குழுமுன்னர் தெரிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. பிரெட். இ. அலெஸ் முன்னிலையில் இப்பகிரங்க விசாரணை நடைபெற்றது. விசாரணைக் குழுவில் திருவாளர்கள் பி. ஆர். பி குணவர்த்தனை, பி. சங்கரப்பிள்ளை, பி. டி. அபயபால, டி. சி. இ. எஸ். ஸ்ரீமானே ஆகியோரும் அங்கம் வகித்தார்கள்.

விசாரணையின் போது தென் யாழ்ப்பாண பஸ் பிரயாணிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு. சி. எம். சண்முகநாதன் சாட்சிய

(6-ம் பக்கம் பார்க்க)

மாவட்டசபை மசோதா

கொழும்பு, சனி

மாவட்டசபை மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படமுன் இரு நாட்களுக்கு இது அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையே இம்மசோதாவை எதிர்த்து தீவிர பிரசாரம் செய்வதில் எதிர்க்கட்சியினர் முயன்று வருகின்றனர்.

கோடீஸ்வரன் வழக்கு நிதி

யாழ்ப்பாணம், ஞாயிறு பிரிவு கவின்சிலில் நடைபெறவிருக்கும் கோடீஸ்வரன் வழக்கிற்கு நிதியுதவி பெறும் பொருட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்க பிரமுகர்கள் திரு கோடீஸ்வரன் உட்பட நேற்றுக் காலை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்துடன் பெரியகடை வர்த்தகர் வட்டாரங்களில் நிதிதிரட்டினர். இன்றும் நிதி திரட்டவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நமது உள்ளம் இறைவன் நாமத்தால் சுத்தம் அடைய அடைய நமது ஆணவம் குறைந்து, நமது விரோதிகளும் நம் நண்பர்களாவர். நம் மன அழுக்கே பிறர்மீது அவநம்பிக்கை கொள்ளவும், அதே உணர்ச்சி பிறருக்கு நம்மீது ஏற்படவு செய்கிறது. நாம் அன்பு அளித்தால் நமக்கு அன்பு கிடைக்கும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலக வருஷம் சித்திரை மாதம் 9ம் திகதி [21-4-68]

தபால் விதிகள்

சின்னப்புத்தி உள்ளவர்களைப் பொறுப்பான பதவிகளுக்கு நியமிப்பதால் பெரிய விபரீதங்கள் ஏற்படுமென்று கூறுவதுண்டு. அரசாங்கமொழிக் கமிஷனர், ஓர் அற்ப விஷயத்தைப் பெரிதாக்கி பிரதம மந்திரிக்கும் தலையிடி கொடுத்து, மீண்டும் மொழிப்பிரச்னை கிளம்பக்கூடிய விதத்தில் இப்போது செய்திருப்பது உண்மையாயின் அது எவ்விதத்திலும் நல்லதாகாது.

பிரிட்டிஷ் ஆட்சி இருக்கையில் இந்நாட்டிலே அரசாங்கக் கடிதங்களின் உறைவுக்குமேல் 'ஆன் ஹர் மெஜஸ்டீஸ் சர்வீஸ்' [மகாராணியின் சேவையில்] என்ற ஆங்கிலஎழுத்துக்களில் பொறித்திருந்தது. இலங்கையின் மொழிச் சட்டம் நிறைவேறியபின், அச்சமயம் தபால் அமைச்சராக இருந்த வி. ஏ. எஸ். மரைக்கார் அவர்கள். அரசாங்க தபால் உறைகளின் மீது 'ராஜய சேவயா பினிஸாயி' என்ற சிங்கள எழுத்துக்களில் அச்சிடவேண்டுமென்றும், அனுப்பும் அதிகாரியின் பெயரும் பதவியும்கூட சிங்களத்தில் இருக்கவேண்டுமென்றும் புதியவிதிகளைச்சேர்க்கச் செய்தார். சிங்கள மொழிச்சட்டம் நிறைவேறி, மொழிவெறி நாடெங்கும் தாண்டவமாடிய சமயம் அது.

இந்த மாறுதல் திடீரென ஏற்பட்டதும், சிங்கள மொழிதெரியாத லட்சக்கணக்கான தமிழருக்கும் மற்றவர்களுக்கும் பெரும் மனவேதனை ஏற்பட்டது. கடிதம் யார் அனுப்பியதென்றும், யாருக்கு வந்ததென்றும் புரிந்து கொள்ள முடியாதபடி, முகவரியும்கூட சிங்களத்திலேயே எழுதியிருப்பின், அது எவ்வளவு திகைப்பாக இருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை. பின்னர் நியாயமான தமிழ் உபயோகச்சட்டம் நிறைவேறி, தமிழர்களின் நியாயமான குறைகளைத் தீர்க்க புதிய அரசாங்கமும் ஏற்பட்டது. மொழிவெறியைக் கிளப்பி, தமிழர்களுக்கு அநீதியைச் செய்த ஓர் அரசாங்கத்தை, பொதுமக்கள் நீக்கிவிட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்போது கிளிநொச்சித்தொகுதி பாரிலிமென்ட் உறுப்பினர், அரசாங்கக் கடிதங்களில், சிங்களத்துடனே, 'அரச சேவை' என்று தமிழில் பொறித்த கடிதங்களை அனுப்புவதாயும் பல தலைத்தாபனங்களும் அதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விதம் செய்வதாயும், இது தபால் விதிகளுக்கு 'முற்றும் மாறுபட்ட'தென்றும், மொழிக்கமிஷனர் பிரதம மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதுடன், மேற்குறித்த வழியை மீறுபவர்களுக்கும், அவ்வித தபால்களை அங்கீகரிக்கும் தபால் அதிகாரிகளுக்கும் தண்டனை விதிக்கவும் சட்டம் தயாரிக்கப்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின், இது சிங்களம் தெரியாத சிறுபான்மை மக்களுக்குச் செய்யும் புதிய இம்சையாகும்,

தனிச்சிங்களச் சட்டம் நிறைவேறிய கால முதல் இதுவரை தபால் முத்திரைகளிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்றிலும் அதன் மதிப்பு பொறிக்கப்பட்டு வருகிறது. மொழிக்கமிஷனர் குறிப்பிடும் விதி, சிங்களத்தில் அவ்வசனம் இருக்க வேண்டுமென்றுதான் கூறுகிறதேயன்றி, தமிழிலும் இருக்கக்கூடாதென்று சொல்லவில்லை. சிங்கள எழுத்துக்களை அழித்துவிட்டு தமிழில் மட்டும் பொறித்தால், அதை ஆட்சேபிக்கலாம். அப்படியன்றி தங்களுக்குப் புரியும் மொழியிலும் பொறிப்பது எப்படித் தபால்விதிகளை மீறியதாகும்?

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்ற வசனமுண்டு. மொழிவெறி ஒருவிதமாக அடங்கி, இரு சமூகங்களுக்கிடையிலும் அமைதியும் நல்லுறவுகள் ஏற்பட்டு வரும் இச்சமயத்தில் மீண்டும் அனாவசியமாக தமிழரின் மனதைப் புண்படுத்தி சமூக நல்லுறவுகளைக் கொடுக்கக்கூடிய இவ்வித யோசனைகளை பிரதமர் உள்ளிட்டு தேசாபிமானமுள்ள யாரும் ஆதரிக்க முடியாது.

கிளிநொச்சிப் பிரதிநிதியின் செய்கை தபால் விதிகளுக்கு மாறானதென்ற வாதத்துக்காக வைத்துக் கொண்டாலும் [உண்மையில் மாறு அல்ல] அதைப் பிரமாதப்படுத்தி தண்டனை விதிக்க முற்படுவது, பகுத்தறிவுள்ள யாரும் செய்யக்கூடியதல்ல. மொழியின் நோக்கம் கருத்தைத் தெரிவிப்பது தானேயன்றி பிறர்மீது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கல்ல. சிங்களத்துடனே தமிழிலும் அரச சேவை என்று பொறிப்பதால் குடியா கெட்டுவிடும்? இதனால் யாருக்கு என்ன தீங்கு? இவ்வித குறுகிய புத்தியுள்ள அதிகாரிகளை பொறுப்பான பதவிகளில் நீடித்து வைத்திருப்பது இந்த அரசாங்கத்துக்கோ, நாட்டுக்கோ நல்லதல்ல. தமிழ்ப் பிரதிநிதிகள் கட்சிபேதமின்றி இவ்விஷயத்தை பிரதமருக்கு எடுத்து விளக்கி, மீண்டும் மொழிவெறி தலைதூக்காமல் இருக்கச் செய்வது அவர்களது முக்கிய பொறுப்பும் கடமையுமாகும்.

சைவ பரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம்

தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஆறுமுகநாவலரின்நோக்கங்களை நிறைவேற்றவே சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டது இதன்முதற் தலைவராகவிளங்கியவர் ஆறுமுகநாவலரின் மருகராகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களே. கடந்த 80 ஆண்டுகளாக இச்சபை ஆறுமுகநாவலரின் இலட்சியங்களை நிறைவேற்றுவதையே நோக்காகக் கொண்டு பணியாற்றி வருகின்றது. இவ்வேளையில் நாவலர் பெருமானின் ஏனைய இலட்சியங்களில் மிகவும் ஈடுபாடு கொண்ட தத்புருஷ தேசிகரின் யாழ்ப்பாண விஜயம் இங்கு வாழும் சைவ மக்களுக்கு புதியதோர் புத்துணர்வை ஊட்டவல்லது''.

இவ்வாறு நாவலர் ஆச்சிரமம் மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் இறுதி நாள் மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த சைவபரிபாலன சபைத் தலைவரான திரு. த. முத்துசாமிப்பிள்ளை தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

தேவார பாராயணத்தை அடுத்து வித்துவான் பொன் கனகசபை பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மாணிக்கவாசகர் ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்ற வாக்குக்கிணங்க அன்பினால் அழுது அழுது அரனடி சேர்ந்த அன்பராவர். 8-ம் திருமுறையாகிய திருவாசகம் சிவஞானபோதத்தின் 8-ம் சூத்திரத்தை விளக்குவதாகும். ஆன்மாக்கள் குருமூலமாக இறைவனை அடையும் வழிவகைகளைக் கூறுவதாகவிருப்பதால் திருவாசகம் ஆகிய தேன் ஆன்மாக்களுக்கு மோட்சத்தை அளிக்க வல்லதாகும்.

திரு. சண்முகம் செட்டியார் பேசுகையில், கல்வி அறிவு, சமய அறிவிலும் பார்க்க சமயசாதனைகளே மேலானது என்றும் சைவமக்கள் இதனை பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார். காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன பண்ணிசைப்புலவர் பி. ஏ. எஸ். இராஜசேகரனின் பண்ணிசையும் நடைபெற்றது. [கா. நி.]

ஆசிரியருக்குக் கடிதம்

இடமளிக்காத காரணம் என்ன?

சைவசமய நாயன்மார்களால் பாடப்பட்ட தமிழ் மறையாகிய திருமுறைக்கு இசை விழாக்களில் இடம் கொடுக்காததின் காரணம் தான் யாதோ? யாழ்ப்பாணத்தில் பண்முறைப்படி திருமுறை ஓதக்கூடிய தகுதி வாய்ந்த இசையாளர்கள் இல்லையா? அப்படி இல்லையென இசைவிழா நடாத்தும் கலைஞர்கள் எண்ணியிருப்பார்களேயானால் இசை விழா எடுக்கும்சமயங்களில் இந்தியாவிலிருந்தாவது திருமுறை வித்துவான்களை அழைத்துக் கச்சேரி செய்விக்கலாமே?

தமிழை வளர்க்கவேண்டும், தமிழிசையைப் பரப்ப வேண்டும், 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' என்றெல்லாம் மேடை மீது கூறுகின்றார்கள். ஆனால் தமிழிசைக்கும் சைவத்துக்கும் மூலகாரணமாகிய தேவார, திருவாசகத்துக்கு ஏன் இடம் கொடுக்காது ஒதுங்குகிறார்கள்.

'பண் இசை ரசிகன்'

பைந்தமிழை உயிராக்கிய பாரதிதாசன்

''தமிழுக்கு அமிழ்தென்று பேர் — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் —''

இவ்வாறு தமிழை உயிராக்கிப் பாடல்களைப் பாடி தமிழ்கூறும் நல்லுலகத்தில் வீறார்ந்த— உணர்ச்சியுடன் விளங்கிய பாரதிதாசனின் நினைவுதினம் இன்று. அதனையொட்டி இக் கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

சங்கத் தமிழுக்[கு] ஒளியமைத்தான் — அவன்
தங்கும் இனிமை ஒலியமைத்தான்.

குடும்ப விளக்கை ஆக்கி வைத்தான் — அவன்
இடும்பை யதனை நீக்கி வைத்தான்.

பெண்ணின் புகழை சாற்றிவைத்தான் — அவன்
பண்ணில் நிறைவை ஏற்றிவைத்தான்.

அழகின் சிரிப்பைத் தெரியவைத்தான் — அவன்
அழகிய கருத்தைப் புரியவைத்தான்.

மடமை வாழ்வை விலக்கி வைத்தான்—அவன்
கடமை நெறியைத் துலக்கிவைத்தான்.

பாண்டியன் பரிசைத் தந்து வைத்தான்—அதில்
பழகுந் தமிழினிமை சிந்திவைத்தான்.

புரட்சிக் கவியை ஆக்கி வைத்தான் — அவன்
மருட்சிக் கிலியைப் போக்கிவைத்தான்.

- யோகன்.

ஐயாறன் எழுதுகிறது

யாழ்ப்பாணத்தில் கூடிய அகில இலங்கை சைவமகாநாட்டிலே, ஆலயப்பிரவேச விஷயமாக யாரும் பேசவில்லை. ஒரு தீர்மானமும் நிறைவேறவில்லை.

இதைப்பற்றி சைவபரிபாலன சபைத்தலைவரான சிவநெறிக்காவலரை விசாரித்ததில், இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமைகள் இருப்பதால் தான் சபைஇதைப் பற்றி தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை என்றும் சபையில் பிளவு ஏற்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால் தலைவர் முத்துச்சாமிபிள்ளை அவர்களின் சொந்தக்கருத்து ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பது தான். தாம் இந்துமாமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு, இதற்கு ஆதரவாகப்பேசியுள்ளாராம். 1935-ம் வருடத்திலேயே யாழ்ப்பாண முற்றவெளியில் இதுபற்றி மகாத்மா காந்தியின் கருத்தை ஆதரித்து ஒரு பொதுக் கூட்டம் நடத்தி ஆதரித்துள்ளாராகவும் பல ருசியான செய்திகளையும் தெரிவித்தார்.

சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் சுவாமியின் சந்நிதியின் முன்பாகத் திருவிளக்கேற்றி, அதை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக நாவலர் மண்டபத்திற்கு வந்து, சைவப் பெரியோர்கள் பலர் இச்சபையை முதல் முதல் ஆரம்பித்தனராம். அன்று ஏற்றிய தீபம் அணையாமல் தொடர்ந்து பிரகாசித்து வருகிறது குறிப்பிடத்தக்கதுவைதீசுவரப் பெருமான் தமது ஆலயக்கதவுகளை தமது பக்தர்கள் யாருக்கும் பேதமின்றி காலதேச வர்த்தமானத்துக்குத்தக்கபடி பல வருடங்களுக்கு முன்பாகவே திறந்து விட்டுவிட்டார்.

ஃ ஃ

தீட்சை பெற்றவர்தான் கோவிலுக்குச் சென்று தரிசிக்கலாமென்றும், தீட்சை பெறுதவர் சைவர்களேயல்லவென்றும் தீட்சாகிரமப்படியே ஆலயங்களில் அவரவர்களுக்குத் தகுதியான இடங்களில் சென்று தரிசிக்கவேண்டுமென்றும் சாதி முறைப்படி செல்ல வேண்டுமென்று ஆகமம் கூறவில்லை என்றும் ஸ்ரீதத்புருஷ தேசிகர் விளக்கி கூறியுள்ளார்.

இன்று இந்த ஆகமவிதிப்படி எந்தக் கோவிலிலாவது நடக்கிறார்களா? அப்படி அந்த விதிப்படி செய்வதாயின், எவ்வளவு பேர் ஆலயத்துக்குப் போகமுடியும்?

ஆலயத்தில்கூட்டிப்பெருக்கவும், சமையல் செய்யவும், நந்தவனத்தில் புஷ்பம் எடுக்கவும் தீட்சைபெற்றிருக்க வேண்டுமாம். இந்த ஆகம விதிப்படி இங்கு எந்தக் கோவிலிலாவது செய்கின்றார்களா? உடனடியாகச் செய்யத்தான் முடியுமா?

இதைப்பற்றியெல்லாம் நிதானமாக நன்குயோசித்து இந்தச் சிக்கலை நல்ல படியாகத்தீர்க்க இறைவன் தான் நமக்கு வழிகாட்டி துணை செய்யவேண்டும்.

ஃ ஃ

இம்மகாநாட்டிலே நிறைவேறிய ஒரேஒரு தீர்மானம், நாவலர் பெருமான் வைத்துள்ள சுமார் 3 லட்சம் பெறுமானமுள்ள சொத்துக்களைப்பற்றியது. அதிலிருந்து கிடைக்கும் வருமானங்கள், நாவலர் கருத்துப்படி பயன்படவில்லை என்றும், இதற்காக ஒரு விசேஷ தர்மகர்த்தா சபையை ஏற்படுத்தி, அப்பெரியாரின் திட்டப்படி

[-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க - கனடிய கோஷ்டி யொன்று நிலமார்க்கமாக வட துருவம் அடைந்தது

கடந்த 60 வருடங்களில் நிகழ்ந்துள்ள அரிய சாதனை

வாஷிங்டன், ஏப்ரல் 20

கடந்த 60 வருடங்களில், முதற்தடவையாக, நில மார்க்கமாக, ஒரு கோஷ்டி வடதுருவத்தை அடைந்துள்ளது. இன்று விடியற்காலை இக்கோஷ்டி இந்த அரிய சாதனையை நிறைவேற்றியது.

கடைசியாக இவ்விதம் நில மார்க்கமாக வடதுருவத்தை அடைந்தகோஷ்டி 1909-ல் திரு. பியரே என்பவரின் தலைமையில் சென்றதாகும்.

இப்போது ஏறத்தாழ 60 வருடங்களுக்குப் பின்னர், வடதுருவத்துக்கு நிலமார்க்கமாக ஒரு கோஷ்டி சென்றிருக்கிறது. அமெரிக்கரும் கனடியருமாக அறுவர் அடங்கிய இக்கோஷ்டி, வடதுருவத்தை அடைய 44 நாட்கள் பிரயாணம் செய்துள்ளது.

மொத்தம் 750 மைலுக்கு மதிகமான தூரத்தை இக்கோஷ்டியினர் கடந்துவந்துள்ளனர்.

அமெரிக்கா தெரிவித்த புதியபத்து இடங்களையும்ஹனோய்நிராகரித்தது

ஹனோய், ஏப்ரல் 20

வியட்னும் பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென அமெரிக்கா ஆலோசனை தெரிவித்திருந்த புதிய 10 இடங்களையும் வடவியட்னும் நிராகரித்து விட்டது.

இந்த நிராகரிப்பு, நேற்று ஹனோயில் வெளியான வடவியட்னும் வெளியுறவு அமைச்சின் அறிக்கையொன்றில் அடங்கியிருந்தது

வடவியட்னும் ஏற்றுக்கொள்ள முடியாத இடங்களையே அமெரிக்கா பிரேரித்துள்ளதாக அந்த அறிக்கையில் ஹனோய் குற்றஞ்சாட்டியுள்ளது.

தான் ஆலோசனை தெரிவித்திருந்த இடமான போலிஷ் தலைநகரான வார்சோ பற்றி முறையான பதிலை அமெரிக்காவிடமிருந்து தான் இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் வடவியட்னும், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தெரிவித்திருந்த புதிய 10 இடங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்கா விதித்திருந்த நிபந்தனைகளைத் தானும் இப் புதிய இடங்கள் திருப்திப்படுத்தவறிவிட்டதாக ஹனோய் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

இரு நாடுகளும் தூதுவர்கள் வைத்துள்ள இடத்திலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென அமெரிக்கா கேட்டிருந்ததைக் குறிப்பிட்ட வடவியட்னும் அறிக்கை, புதிய 10 இடங்களிலும் அமெரிக்காவுக்கு மட்டுமே தூதரகங்கள் இருப்பதாகவும், ஆகவே, அமெரிக்காவின் சொந்த நிபந்தனையையே புதிய இடங்கள் பூர்த்தி செய்யவில்லையென்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா குறிப்பிட்டுள்ள 10 புதிய நாடுகளில் பல, நடுநிலைமை நாடுகளுமல்ல வென்பதையும் ஹனோய் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசியாவில் இலங்கை, ஜப்பான், மலேஷியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேப்பாளமும், ஐரோப்பாவில் இத்தாலி, பெல்ஜியம், பின்லாந்து, ஆஸ்திரியாவுமே, அமெரிக்கா தெரிவித்திருந்த புதிய 10 இடங்களாகும்.

யூ தாண்ட் முயற்சி

அமெரிக்கப் பிரதிநிதிகளும், வடவியட்னும் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசக்கூடிய ஒரு சமரசமான இடத்தைத் தெரிவு செய்யும் முயற்சியை, ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக, பாரிஸிலுள்ள வடவியட்னும் ஸ்தானிகரை யூ தாண்ட் இன்னும் சில தினங்களில் சந்தித்துப் பேசவிருக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

டப்ளினில் பேசலாம் என்கிறது அயர்லாந்து

டப்ளின், ஏப்ரல் 20

அயர்லாந்து அரசாங்கம், அமெரிக்க - வடவியட்னும் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தத் தனது தலைநகரான டப்ளினைத்தரை முன்வந்துள்ளது.

இதுபற்றி ஐரிஷ் அரசாங்கம், அமெரிக்க அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

சீனமீது ரஷ்யா குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஏப்ரல் 20

வடவியட்னுமுக்குத் தான் அளித்துவரும் உதவியில் சீனா குறுக்கிடுவதாக ரஷ்யா சீனா மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

மாஸ்கோவில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலே இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வியட்னும் சமாதானத்துக்காக வடவியட்னும் மேற்கொண்டுள்ள முயற்சிகளைச் சீனா உதாசீனம் செய்துவருவதையும் அந்த அறிக்கை கண்டனஞ்செய்துள்ளது.

சியாராலியோனில் நிலைமை சீரடைகிறது

பிரீடவுண், ஏப்ரல் 20

இராணுவச் சதிப்புரட்சி நடத்துள்ள சியாரா லியோனிஸ், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கத்துடன், 4 இராணுவ அதிகாரிகளும், 3 பொலிஸ் அதிகாரிகளும் அடங்கிய தேசிய இடைக்காலக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஆட்சியைக்கைப் பற்றியுள்ள இராணுவ ஆட்சியாளர், நாட்டு நிர்வாகத்துக்கென, 14 அங்கத்தவர்களடங்கிய இராணுவச் சபை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

பழைய ஆட்சியைச் சேர்ந்த 40 சிரேஷ்ட இராணுவ பொலிஸ் அதிகாரிகளைப் புதிய ஆட்சியாளர் கைது செய்துள்ளனர்.

அத்துடன், மாலி தொடக்கம் காலிவரை ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது

ஈராக்-பிரிட்டன் ராஜிய உறவுகள்

பாக்தாத், ஏப்ரல் 20

ஈராக்கும், பிரிட்டனும் தமது ராஜிய உறவுகளை மீண்டும் வைத்துக்கொள்ளத் தொடர்பு கொண்டுள்ளன.

இஸ்ரேல் — அரபுப்போர் வெடித்தபோது, பிரிட்டனுடனான தனது ராஜிய உறவுகளை ஈராக் துண்டித்திருந்தது. மற்றும் அரபு நாடுகளும் இவ்விதமே செய்திருந்தன.

இப்போது, சூடான், அல்ஜீரியா ஆகிய நாடுகளைப் பின் தொடர்ந்து ஈராக்கும் பிரிட்டனுடன் மீண்டும் ராஜிய உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

டாக்டர் கிங் கொலை

சந்தேக நபர் அலபாமாவில் கண்டுபிடிக்கப்பட்டார்

வாஷிங்டன், ஏப். 20

அமெரிக்க நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்கைக் கொலைசெய்ததாகவும் கொலை செய்யச் சதி செய்ததாகவும், குற்றஞ்சாட்டி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள எரிக் ஸ்டார்வோ கால்ட் என்ற பெயருடையவரை, ஜேம்ஸ் ஏர்ல் றே என்பவரென அமெரிக்காவின் பிரதம துப்பறியும் நிறுவனமாகிய எவ். பி. ஐ. அலபாமாவில் கண்டுபிடித்துள்ளது.

ஜேம்ஸ் றே, ஆயுதந்தாங்கிய கொள்ளைக்காக கடந்த வருடம், 20 வருட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தவர் என எவ். பி. ஐ. தகவல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து

ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் இந்தியா வருகிறார்

இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவார்

லாகூர், ஏப்ரல் 20

பாகிஸ்தானில் தற்போது விஜயம் செய்யும் ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின், நாளை தமது தாயகம் திரும்பும் வழியில் புதுடில்லியில் சிறிது நேரம் தங்கி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் பேசுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரை இந்தியப் பிரதமர், பாலம் விமான நிலையத்தில் வரவேற்பார். இரு நாடுகளுக்கும் இடையேயான பொதுப்பிரச்னைகள் பற்றி இரு பிரதமர்களும் விவாதிப்பாரென எதிர் பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுடன் தாம் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள் பற்றி நேற்று லாகூரில் குறிப்பிடுகையில், நண்பர்களின் இருவர்க்கிடையே நடைபெற்ற பேச்சுக்களாகவே அவை அமைந்ததாகவும், பல விஷயங்களில் கருத்தொற்றுமைகண்டுள்ள போதும், சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருந்ததாகவும் ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் கூறினார்.

லாகூரில், நேற்று ரஷ்யப் பிரதமருக்கு வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது. பின்னர், டெலிவிஷன் பேட்டியொன்றில் பேசுகையில், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்ப்பதே தமது நாட்டின் கொள்கையாகும் என்று திரு. கொஸிஜின் வலியுறுத்தினார். இந்த அடிப்படையிலேயே தாஷ்கென்ட் ஒப்பந்தத்துக்கு ரஷ்யா வழிவகுத்தது என்றார் அவர்.

வியட்னும்

வியட்னும் பற்றிக் குறிப்பிட்ட ரஷ்யப் பிரதமர், வடவியட்னும் மீது அமெரிக்கா தனது குண்டுவீச்சை முற்று முழுதாக நிறுத்துவதன், மற்றும் போர் நடவடிக்கைகளையும் கைவிடுவதன், வியட்னமில் நிரந்தர சமாதானத்துக்கு முதற்படியாகும் என்று கூறினார்.

முற்போக்கானகொள்கையைப் பின்பற்றுமாறு கோரிக்கை

அரசியற் கட்சிகளிடம் பிரதமர் இந்திரா காந்தி

புதுடில்லி, ஏப். 20

தூரதிருஷ்டியும், முற்போக்குமான கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, நாட்டிலுள்ள சகல அரசியற் கட்சிகளையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பல ராஜ்யங்களிலும் இடைக்காலத் தேர்தல்கள் நடைபெறுவது பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இதற்கு முக்கியகாரணம், கட்சிகளின் குறுகிய நலன்களேயும் மனப்பான்மையுமே என்று கூறினார்.

நாட்டுக்கு இந்தச் சமயத்தில் அவசியம் தேவைப்படுவது, தூரதிருஷ்டி நிறைந்த கொள்கைகளே என்று பிரதமர் வற்புறுத்தினார்.

பல சமூக பொருளாதாரப் பிரச்னைகளுக்கிடையேயும் நாடு பல துறைகளிலும் முன்னேறி வருவதாகப் பிரதமர் பெருமிதம் கொண்டார்.

நாட்டிலுள்ள சகல இனங்களினதும் ஒற்றுமையையும், மக்களின் பொருளாதார முன்னேற்றத்தையும் பிரதமர் வலியுறுத்திக் கூறினார்.

உ. பி. யில்

இடைக்கால தேர்தல்கள்

லக்னோ, ஏப்ரல் 20

ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தியுள்ள இந்திய ராஜ்யமான உத்தரப் பிரதேசத்தில், அடுத்த ஒக்டோபர் அல்லது நவம்பரில் இடைக்காலத் தேர்தல்கள் நடைபெறலாமெனத் தெரிகிறது.

இதற்கான ஆயத்தங்களை அங்குள்ள தேர்தல் அதிகாரிகள் செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

இடைக்காலத் தேர்தல்களுக்கான நிதியைப் பிரதம தேர்தல் கமிஷனர் பின்னர் அறிவிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலைகள் வளர்வதற்கு கட்டுக்கோப்பான ஒத்துழைப்பு அவசியம்'

இசைவிழாவில் எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் ஒரு சங்கீதக் கல்லூரியை திறம்பட நடாத்துவதற்குரிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதை அறியும்போது வியப்பாகஇருக்கிறது. இதுவரவேற்கத்தக்கதான காரியமாகவுள்ளது. சங்கீதஞானம் பெருகினால்தான் சங்கீதக் கலையை இரசிக்கின்றவர்களின் எண்ணிக்கை பெருகும்'.

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் இரசிகரஞ்சன சபாவின் 17-ம் ஆண்டு இசைவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசும் போதுகுறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

நமது நாட்டில் கலைகள் வளர்ச்சியடைவதற்கு ஒரியக்கத்தின் கட்டுக்கோப்பான ஒத்துழைப்பு அவசியம், 17ஆண்டுகளாக இந்த இரசிக இரஞ்சன சபா இயங்கிவருவதோடு சங்கீதக் கலையை வளர்ச்சியடையச் செய்வதற்கான இசைவகுப்புகளைத் தொடர்ந்து நடாத்திவருவது நல்லஆக்கபூர்வமான காரியமாகும். நமது பழம்பெரும் கலைகளுடன் சங்கீதக்கலை முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. இந்தஇசையை வளர்க்கின்ற பணியை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் இந்தியாவில் நடைபெறும்இசைவிழா நிறைவேற்றி வருகின்றது, அதற்கினையாக யாழ்ப்பாணத்தில் இரசிக இரஞ்சன சபா செய்து வருகின்றதை பாராட்டவேண்டியது நமது கடனாகும். பொதுமக்களிடையே இரசிக்கும் ஞானம் வளர்க்கப்படவில்லையானால் கலை வளர்ச்சிபெற்றதாகாது. இசைக் கல்லூரியை நடாத்துவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்'. (நி.)

சுழிபுரம் மீனவர்கள் படமெடுத்தனர்

சுழிபுரம், சனி

சுழிபுரம்மீனவர்கள் கடல் தொழில் செய்வதற்கான அடையாள அட்டைகளைப் பெறுவதற்குத் தம்மைப் படம் பிடித்துக்கொண்டனர். 150 மீனவர்கள் தனித்தனியாக தங்களைப் படமெடுத்தனர். ஒவ்வொரு மீனவர்களுக்கும் தனித்தனி இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைஇராணுவ உத்தியோகஸ்தர்கள், மீன்பிடி இலாகா அதிகாரி, சுழிபுரம் கிராமசேவையாளர் ஆகியோர் படப்பிடிப்பின் போது பிரசன்னமாயிருந்தனர். சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில்வைத்து படங்கள்எடுக்கப்பட்டன.

மயிலிட்டி கி. ச. தீர்மானம்

குரும்பசிட்டி சனி

"காங்கேசன்துறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கிராமங்களில் கொலைச்சம்பவம், குற்றச் செயல்கள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவற்றை தடைசெய்யக்கூடிய நேர்மை, கண்ணியம், வாய்ந்த அனுபவம்பெற்ற பொலிஸ் அதிகாரிகளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் நியமனம் செய்ய வேண்டும். இதனால் இப்பகுதியில் சமாதானம் நிலைபெற வாய்ப்புஏற்படும்.

மயிலிட்டிக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள மேற்கண்ட தீர்மானம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றது. கிராம சபை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. எஸ். அருணாசலம் தலைமைவகித்தார்.

இத்தீர்மானத்தின் பிரதிகள் காங்கேசன்துறை எம். பி., வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

குளங்களில் தண்ணீர் இல்லை

ஊர்காவற்றுறை, சனி

சரவணைப் பகுதியிலுள்ள அனேகமான குளங்களில் தண்ணீர் வற்றிவிட்டதால் கால்நடைகள் பெரிதும் கஷ்டமடையவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ளகுளங்கள் நன்கு ஆழமாக இல்லாதமையாலேயே தண்ணீர் கோடை காலங்களில்விரைவில் வற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாஜிகான்ஸ்டபிள் கொலைவழக்கு விசாரணை

குரும்பசிட்டி, சனி

"சம்பவதினத்தன்று மாலை 3-30 மணியளவில் எனது சகோதரி வீட்டில் தங்கியிருந்தேன். ந்நேரம் ஜோசேப் என்பவர் அவ்விடம் வந்து காலஞ்சென்றவரை முதலாம் எதிரியும், அவரது இருபிள்ளைகளும் வழிப்பாதையில் வைத்து தாக்கிவிட்டு பின்னர் வீட்டுச் சமயலறைக்குள்ளேயும் வைத்து தாக்கியதாகவும் தெரிவித்தார். நாவிஸ்தலத்திற்கு ஜோசேப்புடன் சன்றபோது காலஞ்சென்ற் ஞானப்பிரகாசம் இரத்தக்காயங்களுடன் சமயலறைக்குள் இறந்துகிடந்தார்"

இளவாலை மாஜிபொலிஸ் கான்ஸ்டபிள் கொலைவழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். தர்மரத்தினம் என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் பின்னர் எதிரிகள் மூவரையும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கஉத்தரவிட்ட நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 30-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

காங்கேசன்துறைப்பொலிசார் இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி இளவாலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவரை கொலைசெய்ததாக எஸ். அந்தோனிப்பிள்ளை, ஏ.யேசுதாசன், ஏ. ஜெயரத்தினம் ஆகிய மூவருக்கு எதிராகஇவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

உடைமைகளை பறிகொடுத்த மாணவரின் கதை

குரும்பசிட்டி, சனி

பல்கலைக் கழக புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றி செய்முறைப் பயிற்சிக்குச் சென்றதன் பின்னர் வீடு திரும்பிய மாணவர் ஒருவர் தமது புகையிரதப் பிரயாணத்தில் ஏமாற்றப்பட்டு கைக்கடிகாரம், பேனா, ரொக்கப்பணம் போன்றவற்றைப் பறிகொடுத்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இவ்வாறு பரிதாபகரமாக ஏமாந்த மாணவர் தெல்லிப்பழையிலுள்ள ஒரு கல்லூரியைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

மெயில் புகைவண்டியில் வந்துகொண்டிருந்த இம்மாணவருடன் எதுவித அறிமுகமும் இல்லாத நபர் ஒருவர் தான் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வேலைபார்த்து வருவதாகவும் விடுமுறைக்கு ஊருக்குப் போய் வருவதாகவும் கூறி அறிமுகப்படுத்தி சிநேகபூர்வமாகப் பேச்சுக்கள் நடத்தினாராம். வெகு நேரம்வரை நட்புறவுடன் பழகியபின் இனிப்புப்பண்டம்எதையோ மாணவனிடம் வழங்கினாராம். சிறிது நேரத்தில் மாணவன் மயக்கமடைந்தபோது இந்நேரம் பார்த்து தமது கைங்கரியத்தில் இறங்கிய நபர் மாணவனின் உடைமைகளைக் களவாடிக் கொண்டு மறைந்துவிட்டாராம். பலமணி நேரத்தின் பின் மயக்கம் தெளிந்து மாணவன் பார்த்தபோது தமது உடைமைகள் திருட்டுப் போனதை அறிந்தாரெனவும் மேற்படி நபரைப் புகைவண்டியில் தேடிப் பார்த்தபொழுது அவர் மறைந்துவிட்டது தெரிய வந்ததாம். மாணவர் ஒருவித சோர்வாக, மயக்கமாக இருப்பதால் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 21-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-30குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 ஜலதரங்கம், 6-45 பாவளம், 7-00 கத்தோலிக்கநிகழ்ச்சி, 7-30 பேட்டி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 நேயர் விருப்பம்.

ரூபா 1000 அபராதம்

கண்டி, சனி

18 ரூத்தல் கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. டி. ச. தர்மசேகரா 1000 ரூபா அபராதம் விதித்து அபராதத்தைக் கட்டத்தவறினால் 6 மாதம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்குமாறுதீர்ப்பளித்தார்.

காலி பொலிஸ் வட்டாரத்தில்உள்ள கந்தர என்னும் கிராமத்தைச்சேர்ந்த எஸ். குணதாச என்பவர் சூட்கேஸ் ஒன்றினுள் 18 ரூத்தல் கஞ்சாவை வைத்துக் கொண்டு விற்பனை செய்ய எத்தனிக்கும்போது கண்டி பஸ் நிலையத்தில் வைத்து கண்டி பொலிஸ் குற்றத்தடுப்பு பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு ஸ்டான்லி ரணசிங்காவால் கைது செய்யப்பட்டார்.

தான்குற்றவாளியென ஒப்புக்கொண்ட குணதாசா 1000 ரூபா அபராதத்தைக் கட்டினார்.

விவசாயிகள் கடன்

சங்கானை, சனி

அரசாங்கத்திடமிருந்து நெற்கடன் பெற்ற விவசாயிகள் இதுகாலவரை கடனைத்திருப்பிக் கொடுக்காததால் 1962-ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட பொருந்தொகையான பணத்தை வசூல் செய்வதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள கடன் நிவர்த்தி செய்யாத சகல சங்கங்களுக்கும் உடனடியாக பணத்தை வசூல் செய்யுமாறு அரசாங்கம் பணித்துள்ளது. இதனைத்தொடர்ந்து சங்கானை மத்தியபல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பொருந்தொகையான பணம் வசூல் செய்வதில் மேற்படி சங்கம் முனைந்துள்ளதுடன் இனியும் பணம் கட்ட தாமதிப்போர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளும் ஆரம்பமாகியுள்ளது.

கடந்தவருடங்களில் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காததால் இச்சங்கத்திற்கு மேலிடம் கடன் வழங்க மறுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. இதனால் ஏழை விவசாயிகள் கடன் பெறமுடிதாத நிலையிலுள்ளனர்.

வலி-மேற்கில் மலேரியா

சங்கானை, சனி

வலிகாமம் மேற்குப் பிரிவில் சங்கானையில் மலேரியா நோய் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதன்காரணமாக மலேரியா எனச் சந்தேகிக்கப்பட்டுள்ளவர்கள் பலர் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கும் கடுமையாகப் பீடிக்கப்பட்டோரெனக் கருதப்படும் நோயாளர் யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கும் அனுப்பப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரியப்பட்டுள்ளார்கள்:-

தலைவர்: செ. காங்கேயன் செயலாளர்: ச. கணேசமணி. பொருளாளர்: த. உருத்திரமாணிக்கம், நூல் நிலையப்பொறுப்பாளர்: செ. சண்முகதாஸ், பொருளாளர்: மா. மதியாபரணம்: விளையாட்டுத் தலைவர்: மு. சிவலோகநாதன்.

[கா. நி.]

சமூக வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் ஆற்றும் பணி

சங்கானை, சனி

கழகங்கள் சனசமூக நிலையங்கள் ஆகியன சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. இவைகள் மூலம் மனித சமுதாயத்திற்கு தேவையுள்ள நற்காரியங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் பல உண்டு. தற்பொழுது கழகங்கள் வாசிகசாலைகள், சனசமூகநிலையங்கள் என பல உருவில் ஆடம்பர விழாக்களுடன் தோன்றி சிறிது காலத்தில் எவர்க்கும் தெரியாமலே மூடுவிழா நடைபெற்று அவைகள் இருந்த இடமேதெரியாது போய் விடுகின்றன.

இதுபோன்ற நிலையங்களை நன்கு பேணிக்காப்பது அவசியம். கலை கலாச்சாரம் இன்னும் பல துறைகளில் வழிகாட்டியாக அமைந்துள்ள இதுபோன்ற நிலையங்கள் மூலம் சிறந்த பொருளாதார நிபுணர்களை நேரில் வரவழைத்து அவர்கள் மூலம் எமது சமுதாயத்திற்குப் பெறவேண்டிய பெறுபேறுகளை அடைய வழிவகுக்கலாம்.

இவ்வாறு சண்டிருப்பாய் நவசக்தி நிலையத்தாரின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

சண்டிருப்பாய் ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெற விழாவுக்கு நிலையத் தலைவர் திரு. நா. கந்தையா தலைமை வகித்தார்.

மானிப்பாய் கிராமசபை உறுப்பினர் திரு எம்.சுந்தர மூர்த்தி ஆசிரியர் திரு எஸ். இரத்தினம் திரு.எஸ் மார்க் கண்டு மானிப்பாய் கி. ச. தலைவர் உட்பட பலர் செற்பொழிவாற்றினர்.

நவசக்தி நிலையத்தாரின் கன்னி வெளியீடான 'நீதிமன்றத்திலே' என்னும் சமூக நாடகமும், வெண்ணிலா நாடகமன்றத்தாரின் 'றேடியோக்காதலன்' ஆகிய நாடகங்கள் நடைபெற்றன.

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர் வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலாயா கிரிக்கெட் கோஷ்டி நாளை வருகிறது

யாழ்ப்பாணத்தில் 23-ம், 25-ம் திகதிகளில் இருபோட்டிகளில் கலந்து கொள்ளும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை வந்துள்ள மலாயக் கிரிக்கெட் கோஷ்டி இம்மாதம் 23-ம் 25ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இரு போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கிறது.

இக் கோஷ்டி நாளை நண்பகல் விமானமூலம் விமான நிலையத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இரு போட்டிகளும் 23ம் 25ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

மலாயாக் கிரிக்கெட் கோஷ்டியில் விளையாடுவோர் விபரம்:—

திருவாளர்கள் சுந்தரம் ரொபர்ட், கெக்டர் துரை ரத்தினம், எம். எஸ். மணியம், குரு சரண் சிங், சி. மகாதேவன், ஏ. செல்வ ராஜசிங்கம், கே. பாலேந்திரன், இ. சற்குணாதன், கே பத்மநாதன், ரி, வாசுதேவன், இ. பச்சிமுத்து.

23ந் திகதி நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியில் விளையாடுவோர்:—

டாக்டர் சி. பாலகிருஷ்ணன், (கப்டன்) திரு, பரம்சோதி (உதவி கப்டன்) டாக்டர் என். சிவானந்தன், ருவாளர்கள்எம்தெய்வேந்திரா, ஜே. கனகநாயகம், சி. ரஜாதிரவி, டொனால்ட் கணேசகுமார், கே. சூரியகுமார். ஆர், பத்மஜோதி, என்: சிவசுப்பிரமணியம், ரி.வி. புலானந்த மூர்த்தி, டாக்டர் கே. அருளானந்தன்.

25ம் திகதி நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியில் விளையாடுவோர்:—

திருவாளர்கள் எம். ஜெகதீசன் [கப்டன்] எம். சுரேந்திரா [உதவி கப்டன்] என். இராஜரூபேந்திரா, ஆர். பாலச்சந்திரன், ஏ. ஜெயநாயகம், எம். சம்பந்தன், என். தயானந்தா, எஸ். சிவராஜா, எம். தர்மராஜா, டி. வை. பிற்ச், சி. சண்முகம், பி. விஜயமூர்த்தி, ரி. எஸ். போல் எஸ் இராஜதுரை, .எஸ் துரை சிங்கம்.

இப் போட்டிகளை யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை மலாயர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது [கா. நி.]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

காணி:

யாழ்ப்பாணம்-காங்கேசன் துறை வீதியில் நாச்சிமார் கோவிலடியிலுள்ள தலையாழியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ச. பொன்னையா ஆசிரியர், "இராணி இல்லம்", சங்கத்தானை, சாவகச்சேரி. 1432

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00&9-45 p. m.
Pre Poya & Poya 10-30 a m
Orson Welles
in
DAVID & GOLIATH
[Techni color&Cinemascope]

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
James Coburn, Gila Golan
in
Our Man Flint
[Adults]
[color by De Luxe & cinemascope]

RAJAH
JAFFNA
Daily at
4-45 7-00 & 9-45 p.m.
Pre Poya & Poya 10-30 a m
Robert Anthony
in
Cross Fire in Caracas
[Strictly for Adults]

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

மொடேர்ன் [பதுளை] — விஜிதா [மஸ்கேலியா]

சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் வசர் நடிக்கும்

சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

வீடு தீக்கிரை; ஒருவர் ஆஸ்பத்திரியில்

வேலணை, சனி

வேலணை கிழக்கைச்சேர்ந்த கார்த்திகேசு என்பவரின் வீடு தீக்கிரையாகியது. சமையல் செய்துகொண்டிருக்கையிலேயே தீப்பற்றிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

தக்க சமயத்தில் அயலவர்களின் உதவிகிடைக்காததால் தீயை அணைக்க இயலாத நிலையில், வீட்டினுள்ளிருந்த பொருட்களில் வெளியே எடுக்கப்பட்ட அலுமாரியும் கட்டிலும் தவிர ஏனைய பொருட்களும் உணவும் சாம்பலாகின.

பொருட்களை வெளியே எடுப்பதில் ஈடுபட்ட கார்த்திகேசு என்பவர் எரிகாயங்களுடன் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில மாதங்களுக்குமுன் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபின் திருத்தப்பட்ட அதே வீட்டிற்குத் தான் இக் கதி நேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது;

ஒலிம்பிக் விளையாட்டுகளில் தென்னாபிரிக்கா அனுமதி

மெக்ஸிக்கோ ஆட்சேபம்

மெக்ஸிக்கோ, ஏப்ரல் 20

இவ்வருடக் கடைசிப் பகுதியில் மெக்ஸிக்கோவில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தென்னாபிரிக்காவை அனுமதிப்பது பற்றி மெக்ஸிக்கோ ஒலிம்பிக் கமிட்டிக்கும், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்குமிடையே கடுமையான அபிப்பிராய பேதம் ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவை இவ்வருட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுமதிப்பது என்ற முடிவு, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியினால், மெக்ஸிக்கோ, ஒலிம்பிக் கமிட்டிக்கு உத்தியோகபூர்வமாக இது வரை அறிவிக்கப்படவில்லை என மெக்ஸிக்கோ கமிட்டி அறிவித்துள்ளது.

ஆனால், இதைச் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் பிரதம காரியதரிசி மறுத்துள்ளார்.

"விளையாட்டாக மதிக்கவேண்டும்"

முல்லைத்தீவு, ஞாயிறு

',விளையாட்டில் ஏற்படும் பிரச்னைகளை விளையாட்டாகவேமதித்து நடக்கப் பழகிக் கொள்வதேவிளையாட்டு வீரர்களின் சிறந்தபண்பாகும். விளையாட்டுப் போட்டிகளில் பார்வையாளர்கள் உணர்ச்சிவசப்பட்டு மத்தியஸ்தர்களுடனோ விளையாடிக்கொண்டிருக்கும் வீரர்களுடனோ அனாவசியமான பேச்சுவார்த்தைகளைப் பாவிப்பது தங்கள் கௌரவத்தைக் குறைப்பதாகும்'' என்று முல்லைத்தீவில் நடந்த விளையாட்டுவிழாவுக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டுபேசும்போது வவனியா எம். பி. திரு. தா சிவசிதரம்பரம்கூறினார்.

முல்லைத்தீவு காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

நாவாந்துறை வெற்றி

சுழிபுரம். சனி

யாழ்ப்பாணம்— நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கோஷ்டிக்கும் அராலி சில்வஸ்டாஸ் விளையாட்டுக் கோஷ்டிக்கும் இடையே சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றி பெற்றது. திரு. க. இராமநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

"மதம்மாறியதால் புகழ்பெறவில்லை"

கொழும்பு, சனி

''சகோதரிநிவேதிதா கிறிஸ்தவ மதத்தைவிட்டுசைவ சமயத்தை தழுவிய காரணத்தால் புகழ் பெறவில்லை. மனித இனத்திற்கு அவர் செய்த தொண்டே, நிலையான புகழை அவருக்குத் தேடிக் கொடுத்தது.''

நேற்று முன்தினம் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற சகோதரி நிவேதிதாவின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபாரத சந்நியாசினி பிராவ்ஜிதா ஆத்மபிராணா மேற்கண்டவாறுகூறினார்.

30-ந் திகதிவரை ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, சனி

அச்சுவேலி கொலைவழக்கு விசாரணை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வரணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை என்பவரை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 27-ந் திகதி கொலை செய்ததாக செல்லத்துரை சோமசுந்தரப், செல்லத்துரை விசாகரத்தினம் ஆகிய இரு சகோதரர்களுக்கு எதிராக இவ்வழக்கில் காங்கேசன்துறை பொலிசார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

விளம்பரம்

கேள்விவிளம்பரம்

வேப்பங்குளம் சாஸ்திரியார்குளம் றோட்டிற்குபதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து ரெண்டர் விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. ரெண்டர் பத்திரங்கள்யாவும் 28-4-68 காலை 10.00 மணிக்குமுன் பதிவுத்தபால்மூலம் எனக்கும் பிரதி, உ.உ. ஆணையாளர் அவர்கட்கும் கிடைக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் 25-4.68காலை 9.30/12.00 மணிக்கும் இடையில் ரூபா 50.00 கட்டுப்பணம் கட்டி ரெண்டர் பத்திரம் நேரில் பெற்றுக் கொள்ளவேண்டும். பத்திரப்பணமாகக் கட்டும் ரூபா 10 00ம் திரும்பப் பெறமுடியாது. மேற்கொண்ட விபரங்கள் இசசபையின் கந்தோர்நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வ. பொன்னையா,
கி. ச. அக்கிராசனர்,
நடுச்செட்டிகுளம்,
கி ச. கந்தோர்,
பம்பைமடுச்சந்தி,
17.4.68. 625

மரண அறிவித்தல்

அளவெட்டி அருணோதயக் கல்லூரி முன்னைநாள் தலைமையாசிரியர் திரு. த. சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை மாஸ்றர்) அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னாரின் பூதவுடல் 21-4-68 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குஅளவெட்டி மயானத்தில்தகனஞ்செய்யப்படும். 627

மரண அறிவித்தல்

—செல்வி சதானந்ததேவி—

மானிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய போஸ்ட் மாஸ்ரர் செல்லையாவினதும் திருமதி செல்லையாவினதும் இளையமகளும், யாழ்ப்பாணதபாற்கந்தோர் உதவிப் போஸ்ட்மாஸ்ரர் விவேகானந்தராசா, மகேந்திரன், மகேஸ்வரி மதுரநாயகம், சீதாலட்சுமி, சகுந்தலாதேவி ஆகியோரின் சகோதரியும், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை தவமலர் விவேகானந்தராசாவி மைத்துனியும் ஆகிய செல்வி சதானந்ததேவி, இம்மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார், அவரது ஈமக்கிரியைகள் 9-ந் திகதி மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் அவரது சிறந்த பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் கடவுள் பக்தியையும் நினைந்து நினைந்து கவலையில் ஆழ்ந்த உற்றார் உறவினர் மத்தியில் நடைபெற்றன. 626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆலயப்பிரவேசம் என்றபதம் மாற்றப்பட வேண்டும்'

வன்முறைசெயல்களால்பிரச்னைசிக்கலாகும்

ஆலோசனைக் கூட்டத்தில் பிரமுகர்கள் கருத்து

அளவெட்டி, சனி

"மாவிட்டபுரம்கந்தசாமி கோவில் ஒரு சைவாலயம். இது இந்து ஆலயமல்ல. இவ் ஆலயத்தின் அமைப்பும் கிரியா ஒழுங்குகளும் வேதசிவாகமத்தின் படியே இயங்கி வருகின்றது. ஆகவே வேதாகமங்களை அனுசரியாத எந்தச் சபையும் இவ்வாலயச் சம்பந்தமான எவ்வித கருமத்திலும் தலையிடுவது விரும்பத்தக்கதல்ல. காலத்துக்கேற்ற மாற்றங்களை காலமே இயற்கையாக மாற்றட்டும். வன்முறைச் செயல்களிலும் ஈடுபடுவதால் பிரச்சனை சிக்கலாகும்."

இவ்வாறு திரு. வ. சரவணமுத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமது கருத்தைத் தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சுமுகமான நிலையை உருவாக்க பொலிஸ் அதிபரால் அண்மையில் மாவிட்டபுரத்தில் கூட்டப்பட்ட மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட குழுவின் முதலாம் ஆலோசனைக் கூட்டம்குழுத் தலைவர் பிரமஸ்ரீ து.சண்முகநாதக் குருக்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு மாவிட்டபுரத்தை அடுத்த கிராமங்களிலிருந்து அதிகமான சைவமக்கள் பங்குபற்றினார்கள்.

ஸ்ரீரமஸ்ரீ து சண்முகநாதக் குருக்கள் தமதுதலைமையுரையில்: பொலிசார்கேட்டுக் கொண்டதற்கிணங்க பல கூட்டங்களைக் கூட்டி ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தை அறிவதே இக் குழுவின் கடமையாகும் எனக் கூறினார்.

பிரமஸ்ரீ து. சுந்தர மூர்த்தி ஐயர் பேசுகையில்:-

"ஆலயப்பிரவேசம்என்று இன்று எழுந்துள்ள சொல் எம்மை பிழையான வழியில் இட்டுச் செல்லுகிறது புதுமனைகட்டி குடிபுகுதல் கிருகப்பிரவேசம் ஆகும். ஆனால் ஆலயத்துக்கு மக்கள் கூடுவது தரிசனத்துக்கு அல்லாமல்குடியிருப்பதற்கல்ல. எனவே ஆலயத்தரிசனம் என்று சொல்வதே தகும். ஆலயதரிசனத்துக்கு இன்று பிரச்சனையே இல்லை. நியதிப்படி ஆலயத்தில் கூடுபவர்கள் எல்லோருக்கும் தரிசனம் கிடைக்கின்றது.

தீண்டாமை ஒழிப்பு என்பது ஆசார ஒழிப்பு. தீண்டாமை என்றபதம் தீட்டில் இருந்து தோன்றியது. முக்கியமாக சைவ மக்கள் கைக்கொள்ளும் முக்கிய அம்சமான தீட்டு கால எல்லையற்றதுமாக இருப்பதால் அதை விட எமக்கு உரிமையில்லை. சைவத்தின் பண்பையே அழிப்பதாகும்."

திரு. வ. செல்லத்துரை தமது கருத்தைத் தெரிவிக்கையில், "அந்தணர்கள் மேற்பார்வையில் வேதசிவாகமங்களின் படி நடத்தப்பட்டுவரும் இக்கோவில் ஆலயப் பிரவேசத்துக்கு தேர்ந்தெடுத்த காரணம் என்ன என்று தெரியவில்லை. பண்டைய கட்டுக் கோப்புக்களை இக் கோவிலில் சேவை செய்யும் மேளகாறர் (இசையாளர்) மேற்கட்டிக்காரர், மற்றும் பல தொண்டர்கள் பரம்பரையாக நியதிப்படி சேவையாற்றி வருகிறார்கள். இப்படியான கட்டுக் கோப்புக்குள் இயங்கும் இக் கோவிக் ஆலயப் பிரவேசத்தை மேற்கொண்டால் கோவிலின் புனிதத்தன்மை கெட்டு விடும் என்றார்.

திரு. க. சின்னத்துரை பேசுகையில்: சமய சம்பந்தமான வழிகளைக் காட்ட வேண்டிய குருமார் பொது மக்களிடம் அபிப்பிராயம் கேட்பது பொருத்தமற்றது. ஆகவே முக்காலமும் இறைவன் திருமேனி தீண்டும் அந்தணர்களே வழிகாட்ட வேண்டும்.

இன்னும் பல தரப்பட்ட கருத்துக்கள் இடம் பெற்றதையடுத்து இறுதி முடிவு எடுப்பதற்கு அடுத்த வரும் 26-ம் திகதி வெள்ளியன்று இக் குழுவின் இரண்டாவது கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது

ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யான தர்ம காரியங்கள் நடைபெறச் செய்யவேண்டுமென்றும், அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் எம். பி.மார்கள் இதில் கவனமெடுத்து, இவ்வித தர்மகர்த்தா சபையை சட்டபூர்வமாக அமைக்கத் தக்க ஏற்பாடுசெய்வது நாவலர் பெருமானின் கருத்து நிறைவேறவும், இங்கு சைவ சமூகம் மேம்படவும் உதவுவதாகும்.

ஃ ஃ

அம்மானை யமுதின்னமுதே
யென்று
தம்மானைத் தத்துவத்தடி
யார் தொழும்
செம்மான நிறம் போல்வ
தோர் சிந்தையுள்
எம்மானைக் கண்டு கொண்ட
தெனுள்ளமே

—அப்பர் சுவாமிகள்

[தலைவனை, அமுதத்தினும் மேலான அமுதம் போன்றவனே என்ற தத்துவத்தை அறிந்த அடியவர்கள் தொழும் நம் தலைவனும் செம்மையாகிய தூயசிந்தையுள் இருக்கும் எம்பெருமானை என் உள்ளம் கண்டுகொண்டது.]

விவசாயப்படை வாலிபனின் மர்ம மரணம்

பொலிஸ் கோஷ்டி குருநாகலைக்கு

யாழ்ப்பாணம்,ஞாயிறு

ஒட்டிசுட்டான் விவசாயப் படையைச் சேர்ந்தசிவலோகநாதனின்மரணம் சம்பந்தமாக இங்கு வந்திருந்த இரகசியப் பொலிசார் நேற்றுக்காலை குருநாகலைக்குச் சென்றார்கள்,

இம்மரணம் சம்பந்தமாகக் கிடைத்தசிலதகவல்களை துப்புத்துலக்கவே இவர்கள் நேற்று குருநாகலிலுள்ள விவசாயப்படைத் தலைமைக் தலத்திற்குச் சென்றார்கள். இவ்வாரத்தில் இவர்கள் திருமலை. அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் விசாரணைகளை மேற்கொள்ளச் செல்வார்கள் எனத் தெரிகின்றது.

கொழும்பிலிருந்து ஒட்டிசுட்டான் வந்த 8 பேரைக் கொண்ட இந்த இரகசிய பொலிஸ் கோஷ்டியினர் இம்மாதம் வரை இங்கு தங்கியிருப்பார்கள். புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [ஈ.நி]

இன்றைய பலன்

சித்திரை மீ 9 உ

[21 - 4 - 1968]

ஞாயிற்றுக்கிழமை

திதி- நவமி மாலை 5-02 மேல் தசமி,

நட்சத்திரம்- திருவோணம் பகல் 11-59 மேல் அவிட்டம்.

ராகுகாலம்- 4-31 — 6-01.

சுபநேரம்- 9-01 — 10-31.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு நற்பலன்களையே குறிப்பிடுகின்றது. கல்வித் துறையில் முன்னேற்றமும், இனசன மகிழ்ச்சியும் உண்டு. தம்பதிகள் வாழ்வில் தென்றல்வீசும். தெய்வ சிந்தனையும், தெளிந்தமனமும் உண்டு. தொழில்துறையில் நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும்

மேஷம்- நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

ரிஷபம்- புத்திரர் புகழ் புதிய உற்சாகம்.

மிதுனம்- வேவுக்களை தொடுப்பர் விழிப்புடன் இரு.

கடகம்- இன்பத்துடிப்பு இதயங்கள் இணையும்.

சிம்மம். செய்தொழில் தாமதம், சிந்தனை மிகுதி.

கன்னி- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

துலாம்- இன்னல்கள் மறையும், இடமாற்றமுண்டு.

விருச்சிகம்- பொருள் வரவு, புதிய திருப்பம்.

தனுசு- சிந்தனைப்புதிர், சிறிவரும் கோபம்.

மகரம்- வாழ்க்கையில் புயல், வரவும் தடைப்படும்.

கும்பம்- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.

மீனம்- தடைகள் தாக்கும், தாமத மிகுதி.

— சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

சங்கிலியன்வென்றது

யாழ்ப்பாணம். ஞாயிறு நல்லூர் சங்கிலியன் மன்றத்துக்கும், திருநெல்வேலி சிவன் ஸ்போட்ஸ் கிளப்புக்குமிடையில் நடைபெற்ற [illegible] சங்கிலியன் மன்றம் வெற்றியடைந்தது. [ஈ.நி]

வடபகுதி அசைஸ் விசாரணை

1-ம் எதிரி விடுதலை 2-ம் எதிரிக்கு 5 வருடசிறை

மட்டுவில் கொலைவழக்கு தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டுவில் கொலை வழக்கில் 1-ம் எதிரியான சுப்பன் தம்பன் விடுதலை செய்யப்பட்டார். 2-ம் எதிரியான தம்பன் சின்னப்புவிற்கு 5 வருடக் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ.சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 67-ம்ஆண்டு பெப்ரவரி 16-ம் தேதி சாவகச்சேரி பகுதியிலுள்ள மட்டுவில் தெற்கில் நாகர் சின்னத்தம்பியை கொலைசெய்ததாக சுப்பன் தம்பன், தம்பன் சின்னப்பு ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது

1-ம் எதிரி சார்பில்பாரிஸ்டர் எம். சிவானந்தன், புறக்டர் ஈ. கோபாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அட்வகேட் சி. ஆறுமுகம் ஆஜரானார்.

டாக்டர் ஏ. ரி. நல்லையா, டாக்டர் வி. சிறிகாந்தன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இரண்டாம் எதிரி, கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்கறிஞரின் புத்திமதியைக் கேட்டு, 2-ம் எதிரி கைமோசக் கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டது மிகவும் புத்திசாலித்தனமானது என தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் குறிப்பிட்டார்.

அசைஸ் விசாரணை நாளைகாலைவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

எதிரியை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. கைமோசக் கொலைக்குற்றத்தை எதிரி ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நேற்றுவரை தீர்ப்பளிப்பது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஆர். ராஜரத்தினம் புறக்டர் ரி தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் கூறியதாவது:- சண்டித்தனம் செய்வது கெட்டித்தனமில்லை. அதுகோழைத்தனம். உமக்கு மாறாக அறிக்கை வந்திருக்கிறது. உம்மை மறியலுக்கு அனுப்பினால் கெட்டு விடுவீர் என இரக்கம் காட்டி 3வருடம் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்புகிறேன். அங்கு ஒரு தொழில் பழகி பயனடையலாம். 21 வயதிற்குள் குறைந்திராவிடில் கடுமையான தண்டனை கிடைத்திருக்கும்.

உமது சகோதரன் உம்மை பழுதாக்கியதாக அறிக்கை கூறுகிறது. அவருடன் பழகவேண்டாம். நீர் சமயபாடத்தில் சித்தியடைந்திருப்பதாகவும், சாரண இயக்கத்திலிருந்ததாகவும் உமது வழக்கறிஞர் தெரிவித்தார். சமயபாடத்தைப் படித்துப் பிரயோசனமில்லை அதன்படி ஒழுகி நடக்கவேண்டும். சாரணர் இயக்கத்திலிருப்பவர் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும்.

இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா 17 வது ஆண்டு விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

மாலை

6-00 — 6-30 — யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபா சங்கீதக் கல்லூரி மாணவர்கள் —பாட்டு.

6-30 — 8-00 திருமதி விஜயலட்சுமி ஆறுமுகசாமி —பாட்டு.

8-00—8-15— தலைமையுரை. திரு. முருகவேள் [விசேஷ ஆணையாளர் மாநகரசபை]

8-15—9-45— திரு. கே. வி. தம்பு—பாட்டு

9-45—11-15 — திருமதி சத்தியபாமா இராஜலிங்கம் பாட்டு.

யாழ். பஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மளிக்கையில், ஸ்ரீமாவோ ஆட்சியின்போது ஒவ்வொரு பஸ் டிப்போவிலும், பஸ் பிரயாணிகள் சங்க உறுப்பினர்களைக்கொண்ட ஆலோசனைச் சபை ஒன்று ஆலோசனை கூறிவந்ததாகவும், ஆனால் தேசிய அரசாங்கம் வந்த பின்னர் இச்சபைகள் நிறுவப்படாததால் விபத்துக்கள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டதாக தெரிவித்தார்.

விசாரணையின்போது தெரிவிக்கப்பட்ட சில விபரங்கள் பின்வருமாறு:-

பிரயாணிகள் சங்கங்கள் கருத்துத் தெரிவிக்காமல் நேரசூசிகள் மாற்றுவது தவிர்க்கப்படவேண்டும்.

பிரயாணிகள் நலனை முன்னிட்டு போதிய வசதிகள் பஸ் நிலையங்களில் ஏற்படுத்த வேண்டும்.

பஸ்தரிப்பு நிலையங்கள் தவிர வேறுஇடங்களில் பஸ்கள் நிற்பாட்டுவதற்கும் பஸ்தரிப்பு நிலையங்களில்நிற்பாட்டாது செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மது போதையில் சாரதிகள் பஸ் ஓட்டுவது முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

கடமையிலிருக்கும் போது இ. போ. ச. ஊழியர்கள் மது அருந்துவதை சட்ட மூலம் ஒழிக்க பிரயாணிகள் சங்கங்களின் ஒத்துழைப்பையும் இ. போ. ச. பெற வேண்டும்.

வடபகுதி இ. போ. ச. பிராந்திய அதிபர் திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை இபோ. ச. விநியோக உதவியாளர் திரு. கே. அரியராசா முன்னாள் மேயர் திரு. எஸ். இ. மகாதேவா ஆகியோர் உட்பட வடபகுதியைச் சேர்ந்த பல்வேறு பஸ் பிரயாணிகள் சங்கங்களினதும் பிரதிநிதிகளும் விசாரணையில் சாட்சியமளித்தனர். விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும். (ஈ.நி)

காணவில்லை

14-4-68-ல் இருந்து காணவில்லை. சுமார்4 அடி8 அங்குல உயரமான வயது 14 கருப்பு நிறமான நல்ல உடம்பையுடைய இடுப்பளவு நீளமான தலைமயிரையுடைய அனுராதபுரத்தைச் சேர்ந்த பாக்கியம் என்னும் பெண் காணப்படவில்லை. தகவல் தெரிந்தோர் கிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு அல்லது கீழ்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த வெகுமதி கொடுக்கப்படும். ஏ. மகேந்திரன், பஞ்சவர் இல்லம் சண்டிலிப்பாய். 1521

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org